வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 21.09.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், அக்டோபர் 20ஆம் தேதி முதல், அமலுக்கு வரவுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா நாளை புதுடெல்லியில், மாநில போதை எதிர்ப்பு பணிக் குழுக்களின் தலைவர்கள் மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்தினால் நாட்டில் கைவினைக் கலைஞர்கள், மற்றும், சிறு தொழில் நிறுவனங்களின் போட்டித் திறனும், வருவாயும் அதிகரித்துள்ளது.

புதுச்சேரியில், டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இந்தியா -நியூசிலாந்து -1 (09)

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், அக்டோபர் 20ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளது. இதனால், நியூசிலாந்தில், இந்தியாவின் அனைத்து ஏற்றுமதி

பொருட்களுக்கும், முழு வரிவிலக்கு கிடைக்கும் என, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை அடுத்த 4-5 ஆண்டுகளில் இரண்டு மடங்காக உயர்த்தவும் இதனால் ஏதுவாகும் என்றும் அவர்கூறினார். வரியில்லா வர்த்தக உடன்பாடு குறித்து கூடுதல் விவரங்கள் ….

(வாய்ஸ்)

இந்தியா -நியூசிலாந்து – 2 வாய்ஸ்  (19)

(வாய்ஸ்)

இந்தியாவிற்கும், நியூசிலாந்துக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், இந்திய ஜவுளி, ஆடை ரகங்கள், காலணி, தோல் பொருட்கள், வேளாண் பொருட்கள், பதப்படுத்திய உணவுகள், மருந்துகள், மற்றும், பொறியியல் பொருட்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகள் கிடைக்க உள்ளன. அதே சமயம் நியூசிலாந்தின் கம்பளிப் பொருட்கள், ஆட்டிறைச்சி, மற்றும் கச்சா தோலுக்கு, இந்திய சந்தையில் புதிய வாய்ப்புகள் கிடைக்கவும், உடன்பாட்டினால் ஏதுவாகும். இது அல்லாது முதலீடு, தொழில்முறை சேவைகள், மாணவர் பரிமாற்றம் மற்றும் பல்வேறு சேவைத் துறைகளிலும், புதிய வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் 20 பில்லியன் டாலர் அளவிற்கு புதிய முதலீடுகள் வந்து சேர வழிவகை செய்வதாக, வரியில்லா வர்த்த உடன்பாடு அமையும் என்றும், ஆயுஷ் உள்ளிட்ட பாரம்பரிய மருந்துகள், மற்றும், நவீன மருந்துகளின் உற்பத்தியை அதிகரிப்பதும், வேளாண் உற்பத்தி திறனை மேம்படுத்தவும், தொழில்நுட்ப பரிமாற்றங்களை ஊக்குவிக்கவும், இதனால் ஏதுவாகும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தியாவிற்கும் நியூசிலாந்துக்கும் இடையே, மக்கள் நிலையிலான தொடர்புகள், மற்றும், தொடர் வளர்ச்சியுடன் கூடிய பல்துறை ஒத்துழைப்பு அடிப்படையில், நெருங்கிய உறவுகள் நிலவி

இந்தியா -நியூசிலாந்து -3 வாய்ஸ்  (03)

வருவதும், இருநாடுகளும் பயன்பெறும் வகையில் இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்த, வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமித்ஷா போதை (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா நாளை புதுடெல்லியில், மாநில போதை எதிர்ப்பு பணிக் குழுக்களின் தலைவர்களுக்கு இடையிலான, 3ஆவது தேசிய மாநாட்டை தொடக்கி வைக்கிறார். போதைப் பொருள் கட்டுப்பாட்டுக் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த 2 நாள் மாநாட்டில், எதிர்கால தலைமுறையை போதைப் பிரச்சனையில் இருந்து பாதுகாக்க, பொதுவான பொறுப்புணர்வு அடிப்படையில், அனைத்து தரப்பினரும், ஒருங்கிணைந்த மனஉறுதியுடன் பாடுபட வேண்டியதன் அவசியம் குறித்து, விரிவாக விவாதிக்கப்படும். இது குறித்த தொலைக்காட்சி விளம்பரங்களையும்,மத்திய உள்துறை அமைச்சர், மாநாட்டின் போது வெளியிட இருக்கிறார். போதைப்பொருள் கட்டுப்பாட்டுக் கழகத்தின் லக்னோ மற்றும் டேராடூன் மண்டலங்களுக்கான புதிய கட்டிடங்களுக்கும், நிகழ்ச்சியின்போது அடிக்கல் நாட்டப்படும்.

விநாடி வினா (13)

மத்திய அறிவியல் – தொழில் ஆராய்ச்சிக் கழகம், தனது 85ஆவது நிறுவன நாளையொட்டி, மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சகத்துடன் இணைந்து, மை-பாரத் இணையதளம் மூலம், விநாடி-வினா போட்டி ஒன்றை நடத்துகிறது. அறிவியல் மற்றும் புதுமையாக்கம் குறித்து, வரும் 26ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், இளைஞர்கள் உட்பட பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். இந்தியாவின் அறிவியல் சாதனைகள், தொழில்நுட்பங்கள், மற்றும், புதுமைப் படைப்புகள் குறித்து மக்கள் அறிந்து கொள்ளவும், அறிவியல் குறித்த விழிப்புணர்வை அதிகரித்து, நாட்டின் அறிவியல் முயற்சிகளில் மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கவும், இப்போட்டி உதவிகரமாக இருக்கும் என மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சகம்

தெரிவித்துள்ளது. வரவிருக்கும் மாதங்களில், இத்தகைய விநாடி-வினா போட்டிகள் மீண்டும் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய விளையாட்டு - முர்மு (11)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் கூட்டு தற்காப்புக் கலைகள் பிரிவில், வெண்கலப் பதக்கம் வென்றுள்ள இந்திய வீராங்கனை சுசிகா தரியாலுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார். இப்பிரிவில் இந்தியா பங்கேற்பது இதுவே முதல் முறை என்பதால் சுசிகாவின் சாதனை, சிறப்பு முக்கியத்துவம் பெறுவதாக சமூக ஊடகப்பதிவு ஒன்றில் குடியரசு தலைவர் கூறியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைஃபிள்-துப்பாக்கிச் சுடும் பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீரர் Himanshu Dhillon, வெண்கலப் பதக்கம் வென்ற Rudranksh Patil ஆகியோருக்கும் குடியரசு தலைவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சேவா சங்கல்ப் (15)

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்**, இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து நீடிக்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், இந்த சிறப்பு **தொடரில்,** பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, **உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம்** இயக்கத்தினால், உள்நாட்டு அளவிலான உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகள் அதிகரித்து இருப்பது குறித்து, தற்போது காண்போம்...

(

சேவா சங்கல்ப் - 2 வாய்ஸ் (19)
(வாய்ஸ்)

இந்தியாவில் நீண்டகாலமாக, இறக்குமதி பொருட்கள் மற்றும் பிரபல வணிக முத்திரை பொருட்கள் மீதே, நுகர்வோர் அதிக ஆர்வம் காட்டி வந்ததால், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கான தேவையும், இத்தகைய பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் கைவினை கலைஞர்கள் மற்றும், சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வாய்ப்புகளும் குறைவாகவே இருந்தன. இந்நிலையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்த உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்தினால் மக்கள் தற்போது, தரமான, உள்ளூர் உற்பத்திப் பொருட்களை அதிகம் வாங்கி பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இதனால் கைவினைக் கலைஞர்கள், மற்றும், சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்களின் சந்தை திறன், பெரிய நிறுவனங்களுடன் போட்டி போடும் அளவிற்கு வலுவடைந்து இவர்களின் வருமானமும் அதிகரித்துள்ளது. வரி விதிப்பு, வர்த்தகத் தடை போன்ற எந்த கட்டாயங்களும் இன்றி, எந்தப் பொருட்களை வாங்க வேண்டும் என்பதில் மாற்றி யோசிக்கும்படி மக்களுக்கு பிரதமர் விடுத்த வேண்டுகோளே, இந்த அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியுள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், மக்களின் அன்றாட நுகர்வுகளும், நாட்டின் சுயசார்பு லட்சியங்களுக்கு எற்ப மாறிவருவதும், அரசுக்கு எந்தச் செலவும் இல்லாமல், இந்த மாற்றம் ஏற்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. பல தலைமுறைகளாக நம் முன்னோர்

சேவா சங்கல்ப் - 3 வாய்ஸ் (05)

உருவாக்கித் தந்த மரபுகளைப் பேணிக்காத்து, பாரம்பரிய கைவினைக் கலைஞர்கள் மற்றும் நெசவாளர்களின் கண்ணியத்தை உயர்த்துவதும், வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதும், மக்கள் சேவைதான் என்பதே, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஆழ்ந்த நம்பிக்கையாகும்.

ரங்கசாமி (13)

புதுச்சேரியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்ககள் குறித்து முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, தமது அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், எதிர்க்கட்சித் தலைவர் திரு. நாஜிம், மற்றும், சுகாதாரம், பொதுப்பணி, உள்ளாட்சி உள்ளிட்ட துறைகளின் அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வீடுகள் மற்றும் வாய்க்கால்களில் தேங்கி நிற்கும் நன்னீரை அகற்றவும் முதலமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து முதலமைச்சர் திரு. ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், புதுச்சேரியில் டெங்கு காய்ச்சல் குறைவாகத் தான் உள்ளது என்றும், முன்னெச்சரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

## காரைக்கால் – போதை (09)

காரைக்காலில் உள்ள, புதுச்சேரி NIT – உயர்கல்வி நிறுவனத்தில், முன்னேறிய இந்தியாவிற்கான போதையில்லா இளைஞர்கள் என்ற கருப்பொருள் அடிப்படையில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு போதை எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். கையெழுத்து இயக்கத்திலும் இவர்கள் பங்கேற்றனர். தேசிய அளவிலான மை-பாரத் முன்னெடுப்பின் ஒருபகுதியாக, இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

## வானிலை (20) 164

இன்று வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், பின்னர் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலாமாகவும் வலுவடைந்து, வரும் 23ஆம் தேதி காலை, வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா கடலோரப் பகுதிகளுக்கு நகரக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன்கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கள்ளக்குறிச்சி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள்,மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் லேசான

மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 27ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம் பெரிய நாயக்கன் பாளையத்தில், 21 செண்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. பாகூரில் 2 செண்டிமீட்டர் மற்றும் திருக்கனூரில் 1 செண்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## மருந்து அனுப்பிரியா (20)

மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் இன்று புதுடெல்லியில், மருந்துகளின் சரியான பயன்பாடு குறித்து, மருத்துவர்கள் மற்றும் மருந்தாளுநர்களுக்கான வழிகாட்டி நூலின் 7ஆம் பதிப்பை வெளியிட்டார். மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகளை முறையாக கண்காணித்துத் தொகுக்கும் பணிகளில் கடந்த சில ஆண்டுகளில் இந்தியா கடந்து வந்துள்ள பாதை, சுயசார்பின் சிறந்த உதாரணம் என்று அவர் கூறினார். மருந்துகளின் அனுகூலமற்ற விளைவுகளை கண்காணிக்க நாட்டில் தற்போது ஆயிரத்து 100 மையங்கள் செயல்பட்டு வருவதாகவும், இந்த வசதியை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை நீட்டிக்கும் நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். மருந்துகளின் தரம் குறித்த இந்தியாவின் தொகுப்பு நூலை, தற்போது 25 நாடுகள் பின்பற்றி வருவதாக அமைச்சர் தெரிவித்தார். பாதுகாப்பான சிகிச்சை குறித்த, உலக சுகாதார அமைப்பின் தரவுத் தொகுப்பிற்கு தேவையான விவரங்களை அதிகமாக வழங்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா, 8ஆவது இடத்திற்கு முன்னேறி இருப்பதாகவும், அவர் கூறினார். பொதுமக்கள், மருத்துவரின் ஆலோசனை இன்றி மருந்து எடுத்துக் கொள்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்றும், மருந்துகளின் பக்க விளைவுகளை ஒருபோதும் புறக்கணிக்க கூடாது என்றும், அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், அக்டோபர் 20ஆம் தேதி முதல், அமலுக்கு வரவுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா நாளை புதுடெல்லியில், மாநில போதை எதிர்ப்பு பணிக் குழுக்களின் தலைவர்கள் மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்தினால் நாட்டில் கைவினைக் கலைஞர்கள், மற்றும், சிறு தொழில் நிறுவனங்களின் போட்டித் திறனும், வருவாயும் அதிகரித்துள்ளது.

புதுச்சேரியில், டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/CN/VM

Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs/ 21.09.2026 / Script

தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், அக்டோபர் 20ஆம் தேதி முதல், அமலுக்கு வரவுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா நாளை புதுடெல்லியில், மாநில போதை எதிர்ப்பு பணிக் குழுக்களின் தலைவர்கள் மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்தினால் நாட்டில் கைவினைக் கலைஞர்கள், மற்றும், சிறு தொழில் நிறுவனங்களின் போட்டித் திறனும், வருவாயும் அதிகரித்துள்ளது.

புதுச்சேரியில், டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.